# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| MCOP No. 270/2022 | நாள் – 03.02.2026 | சாட்சி – எ.ம.சா.2 |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரவீன் மனோகர் | தந்தை பெயர் | மனோகரன் |
| ஊர் | மதுரை | தாலுக்கா | மதுரை |
| தொழில் | சட்ட அலுவலர், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் | வயது | 39/2026 |

**முதல் விசாரணை:**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன்.
வழக்கு சம்பந்தமான விபரங்கள் எனக்கு கோப்புகளின் அடிப்படையில் தெரியும். 2ம் எதிர்மனுதாரர் நிறுவனமான Bharathi AXA General Insurance Company ஆனது ICICI Lombard General Insurance நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. விபத்து நடந்த தேதியான 13.04.2022 அன்று PY-02-T-5595 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. விபத்து சமயத்தில் மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. எனவே 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டது அல்ல. இழப்பீடு வழங்க வேண்டி இருந்தால் 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே வழங்க கடமைப்பட்டவர்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு விசாரணை அதிகாரியை 2ம்

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நியமித்துள்ளார்கள் என்றால் சரிதான். விசாரணை அதிகாரியின் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். PY–02–T–5595என்ற பதிவெண் கொண்ட வாகனம் விபத்து தேதியில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து தேதியில் மேற்படி வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருப்பதால் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து தேதியில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று கூறும் பட்சத்தில் மனுதாரர்களுக்கு நாங்கள் இழப்பீடு தொகையை வழங்கிவிட்டு 1ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்து கொள்ள எங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.02.03 18:03:42 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*